1990 மே 11] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இன்னொரு தகவலையும், அது நாட்டுக்குத் தேவை என்பதற்காக நாங்கள் அறிய விரும்புகிறோம். இன்றைய தினம் பத்திரிகையிலே 'ரா' நிறுவனத்தைப் பற்றி ஒரு முக்கியமான தமிழ் நாட்டுத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அந்த 'ரா' நிறுவனத்தினுடைய நடைமுறைகளை, நடவடிக்கைகளைக் குறித்து சட்டமன்றத்திலே தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சில உண்மைகளை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும், ஆதாரம் இருந்தால் நிரூபிக்க வேண்டும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'ரா' நிறுவனம் என்பது மத்திய அரசினுடைய ரகசிய நிறுவனம்.

10-20 மணி

இது தொடர்பாகச் செய்திகள், தகவல்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது நன்மையை உத்தேசித்து ரகசிய காப்பு என்ற அடிப்படையிலேதான் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்த நிலையிலே பத்திரிகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏதோ ஒரு தவறான தகவலைத் கொடுத்து இருப்பதைப்போல் ஒரு எண்ணத்தை உருவாக்கிடும் வகையிலே ஒரு தலைவர் தகவலை, செய்தியை வெளியிட்டு, அதைக்குறித்து தகவலைக் கேட்டிருக்கிறாரே, அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தொலைக்காட்சியில் தமிழகத்திற்கு நிவாரண நிதியாக ரூ. 39 கோடி என்று அறிவிக்கப்பட்டதும் நான் கூட கொஞ்சம் ஆதங்கப்பட்டேன். புயல் கொஞ்சமாவது இங்கு வீசக் கூடாதா என்று ஆதங்கப்பட்டேன். உடனடியாக உரியவர்களோடு தொடர்பு கொண்டு விசாரித்து, பிறகு அதை இங்கே விளக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்கிடையே நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இதைப்பற்றி இங்கே பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

1—4—1990 முதல் 9ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இயற்கை, இன்னல் நிவாரணப் பணிகளின் செலவை மத்திய மாநில அரசுகள் ஏற்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அதாவது 31—3—1990 வரை, தமிழக அரசும் மத்திய அரசும் 50 : 50 அதாவது பாதிப் பாதி விகிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதற்கு ரூ. 15.50 கோடி நிதி ஒதுக்க வேண்டும். அதாவது ரூ. $15\frac{1}{2}$ கோடி ஒதுக்க வேண்டுமென்று

இதற்கு முன்பு இருந்தது, 50 : 50 என்ற வகையில். அதைவிட அதிகத்தொகை செலவழிக்க வேண்டியிருந்தால் தேவைகளை விவரித்து நிதி ஒதுக்கக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஏற்கெனவே இருந்த முறை இது. மத்திய அரசு ஒரு அலுவலர் குழுவை அனுப்பிப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செய்து, அவர்கள் அறிக்கையின் மீது அதிகபட்சம் ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு செலவிடலாம் என்று நிர்ணயித்து ஒரு உத்தரவு வழங்கும். இனி இந்த உச்சவரம்பிற்குட்பட்டுச் செய்யப்படும் செலவும் மத்திய மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு விகிதங்களில் பகிர்ந்தளிக்கப்படும் உச்சவரம்பிற்கு மேற்பட்ட செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டும். இந்த நடைமுறையினால் மாநில அரசு செய்ய வேண்டிய செலவுக்கு மத்திய அரசின் முன்னனுமதி கோரும் பிரச்சினை ஒரு பக்கம், நிர்வாகச் சிக்கலும் காலதாமதமும் மறு பக்கம் என்ற வகையில் மாநிலங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகின்ற புதிய கொள்கையின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு துயர்துடைப்பு நிதி ஏற்படுத்தப்படும். இதன் அளவை நிதிக் குழுவே நிர்ணயித்திருக்கிறது. அதன்படி தமிழக அரசின் நிதி அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 39 கோடியாகும். இந்நிதிக்கு மத்திய மாநில அரசுகள் 75 : 25 என்ற விகிதத்தில் பணம் செலுத்தும். வெள்ளம், புயல், வறட்சி, தீவிபத்து முதலிய எல்லாவிதமான இடர்பாடுகளுக்கும் நிவாரணம் இந் நிதியிலிருந்து மாநில அரசுகளுடைய விருப்பப்படி செலவிட்டுக் கொள்ளலாம். மத்திய அரசினுடைய அலுவலர் குழு பார்வையிடுதல், அவர்களின் முன் அனுமதி பெறுதல், போன்ற நடைமுறைகள் கிடையாது. இந்த நிதிக்கு மேலும் செலவு செய்ய வேண்டுமென்றால் அதை மாநில அரசே முழுவதும் ஏற்க வேண்டும். இந்த ஆண்டு நிதியே மிகுதியாக இருந்தால் அதை அடுத்த ஆண்டுச் செலவிற்கும் மாற்றிக் கொள்ளலாம். இந்த நிலையில் தமிழக வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசு ரூ. 39 கோடி அளிப்பதாக அறிவித்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மேலே சொன்ன துயர் துடைப்பு நிதி இன்னும் அமலுக்கே வரவில்லை. மத்திய அரசு அதற்கான விதிமுறைகளையும் வழிமுறைகளையும், பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகத்தான் செய்தி வந்துள்ளது. எனவே, புயல் வேகத்தில் மத்திய அரசு அறிவித்ததாகத் தொலைக்காட்சியில் சொல்லப்பட்டது, புயல் வேகத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியே அல்லாமல் வேறு அல்ல. உண்மை நிலவரம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, ''ரா''வைப் பற்றி ஒரு தலைவர் இங்கே பேசியிருப்பதாக நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டு விளக்கம் கேட்டார். அதுவும் அவர்கள் திருவிளையாடல்தான்.